மேல்நிலை முதலாமாண்டு

சிறப்புத்தமிழ்

வினாத்தாள்

காலம்: 2.30 மணி மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள் :

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்க. அச்சுப்பதிவில் குறையிருப்பின், அதனைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி – அ

குறிப்பு : (1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க. 20×1=20

(2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பதினெண்மேற்கணக்கு நூல்களுள் இடம்பெறாத பாவகையைச் சுட்டுக.

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

2. "சமரச வேசமிட்ட குரங்கினிடம்
அப்பத்தைப் பறிகொடுத்த
பூனைகள் நாம்"– இக்கவிதை, பின்வருவனவற்றுள் எந்த உத்திக்கு உரியது?

அ) அங்கதம் ஆ) முரண் இ) குறியீடு ஈ) படிமம்

3. பொருத்துக.

அ) மணிக்கொடி காலம் – 1) ஈரோடு தமிழன்பன்
ஆ) எழுத்து காலம் – 2) கல்யாண்ஜி
இ) கசடதபற காலம் – 3) வல்லிக்கண்ணன்
ஈ) வானம்பாடி – 4) ந. பிச்சமூர்த்தி

அ) அ – 1, ஆ – 3, இ – 2, ஈ – 4 ஆ ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4

இ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1 ஈ ) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 1

4. கீழ்க்காணும் கூற்றையும் அதன் விளக்கத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று – ஹைக்கூ கவிதை, மூன்று வரியில் எழுதப்படுவதாகும். மிக நுணுக்கமான ஒரு காட்சி அல்லது ஓர் அனுபவப் பதிவைக் கொண்டிருக்கும். கடைசிவரி, படிப்பவரின் மனத்தில் வெளிச்சமான ஓர் உணர்வை ஏற்படுத்தும்.

விளக்கம் – ஹைக்கூவின் முதலிரு வரியில் கூறப்படும் கருத்தை மூன்றாவது வரி வெளிப்படுத்தும்.

அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்று சரி, விளக்கமும் சரி

இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ ) கூற்று தவறு, விளக்கமும் தவறு

5. கீழ்க்காணும் ஹைக்கூ கவிதையைப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

பெருகியது தொழிற்சாலை

காணாமல் போயின

---------------

அ) வேலைவாய்ப்பு, தொழிலாளர் ஆ) விளைநிலம், சிட்டுக்குருவி

இ) இருள், மின்மினிப்பூச்சி ஈ) மகிழ்ச்சி, குழந்தைகள்

6. தமிழகத்தின் 'மாப்பஸான்' என்று அழைக்கப்பட்டவர்

அ) கல்கி ஆ) மௌனி இ) புதுமைப்பித்தன் ஈ) அ. மாதவையா

7. பின்வரும் கூற்றையும் அதன் காரணத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று – படிப்பவரைக் கவரக்கூடிய ஆற்றல் அழகியலுக்கு உண்டு. அது, சிறுகதைக்கும் ஒரு கருவியாக அமைகிறது.

காரணம் – ஒரு கதையானது உவமை, உருவகங்களோடு சொல்லப்படும்போது, அழகியல் உணர்வைப் பெறுகின்றது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி

இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

8. சரியாகப் பொருத்தப்பட்ட விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

'அஷமஞ்சா பாபுவின் நாய்' கதையிலிருந்து

அ) சுகோமோய் பௌமிக் – 1) செய்தியாளர்

ஆ) பிபின் – 2) வேலையாள்

இ) ரஜத் சௌத்ரி – 3) பேராசிரியர்

ஈ) சாட்டர்ஜி – 4) மருத்துவர்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| i) | 4 | 2 | 1 | 3 |
| ii) | 3 | 4 | 2 | 1 |
| iii) | 2 | 1 | 3 | 4 |
| iv) | 1 | 2 | 4 | 3 |

9. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத கூற்று எது?

அ) நாடகத்திற்கு உரையாடல் மிகவும் இன்றியமையாதது.

ஆ) உரையாடல் இன்றி, உடல்மொழி வாயிலாகவும் நாடகம் அமையும்.

இ) உரையாடல் இன்றி, மௌனமாகவும் நாடகம் நடைபெறும்.

ஈ) பொதுவாக, நாடகங்கள் உரையாடல்களோடு அமையும்.

10. கீழ்க்காணும் கூற்றுகளைப் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

ஆர். எஸ். மனோகர் பற்றிய குறிப்புகளுள் பொருந்தாததனைச் சுட்டிக்காட்டுக.

1) தமிழ் நாடக உலகில், 'நாடகக் காவலர்' எனப் போற்றப்பட்டார்.

2) நாடகத்தில் 'மனோகர்' என்னும் கதைமாந்தனாக நடித்ததால், அப்பெயராலேயே அறியப்படுகிறார்.

3) அவரின் இயற்பெயர் ராமசாமி சுப்பிரமணியன்.

4) அவர், 'பாய்ஸ் நாடகக் கம்பெனி'யை உருவாக்கினார்.

அ) கூற்று 1, 2, 4 சரியானவை ஆ) கூற்று 1, 2, 3 சரியானவை

இ) கூற்று 1, 3, 4 சரியானவை ஈ) கூற்று 2, 3, 4 சரியானவை

11. 'ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்து ஒன்றாம் புலவர்
வார்த்தை பதினாயிரத்து ஒருவர்...' என்ற பாடலின் மையக்கருத்து

அ) அவையில் அஞ்சாமல் பேசும்திறன் பத்தாயிரம் பேரில் ஒருவருக்கே வாய்க்கும்.

ஆ) கற்றவர்களின் கருத்துகளை அனைவரும் கேட்டு நடப்பர்.

இ) கவிஞராகத் திகழும் தகுதி, ஒருவருக்கு மட்டுமே கிடைக்கும்.

ஈ) அவையில் அமரும் தகுதி நூறுபேருக்குக் கிடைக்கும்.

12. பின்வரும் கூற்றுகளைப் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று – 1: கால்டுவெல் எழுதிய நூல், 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'.

கூற்று – 2: உரைநடைவடிவில் எழுதப்பட்ட இந்நூல், தமிழறியாத மேலைநாட்டினருக்கும் பயன்படும்வகையில் அமைந்தது.

அ) கூற்று– 1 சரி, கூற்று – 2 தவறு. ஆ) கூற்று– 1, 2 தவறானவை.

இ) கூற்று – 1, 2 சரியானவை. ஈ) கூற்று– 1 தவறு, கூற்று – 2 சரி.

13. பின்வரும் தொடருக்குப் பொருத்தமான இணைப்புச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

நான் நாளை ஊருக்கு வருவேன். ------------, என் தம்பி இன்று வருகிறான்.

அ) ஆகையால் ஆ) ஆகவே இ) ஆனால் ஈ) ஏனெனில்

14. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத கூற்றைக் கண்டறிக.

அ) 'இதழியலின் தந்தை' என அழைக்கப்பட்டவர், அசோகர்.

ஆ) அச்சுப்பொறியினைக் கண்டுபிடித்தவர், ஜோஹன்னஸ் கூடன்பர்க்.

இ) பெங்கால் கெஜட் என்னும் முதல் இந்தியச் செய்தித்தாளை வெளியிட்டவர், ஜேம்ஸ் அகஸ்டஸ்.

ஈ) மெட்ராஸ் கூரியர் என்னும் ஆங்கில வார இதழை வெளியிட்டவர், ரிச்சர்டு ஜான்சன்.

15. தொடக்கக் காலத்தில், செய்திப் பரிமாற்ற நிகழ்வுக்குப் பொருத்தமில்லாததனைச் சுட்டுக.

அ) தீப்பந்தம் எரித்தல் ஆ) புறாக்களின் காலில் ஓலை கட்டுதல்

இ) பறை அறிவித்தல் ஈ) மின்னஞ்சல் அனுப்புதல்

16. 'காகிதமில்லாப் புத்தகங்கள் என்னும் நிலையை நோக்கி, விரைவாகப் போய்க்கொண்டிருக்கிறோம்'. – யார் யாரிடம் கூறினார்?

அ) அமுதன் எழிலனிடம் ஆ) எழிலன் அமுதனிடம்

இ) மின்னூல் ஓலைச்சுவடியிடம் ஈ) ஓலைச்சுவடி மின்னூலிடம்

17. பின்வரும் கூற்றுகளைப் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

1) கையெழுத்து உணரி என்பது, நம் கையெழுத்தை மின்வரிகளாக மாற்றும் தொழில்நுட்பம்.

2) கணினி, செல்பேசி ஆகியவற்றில் இத்தொழில்நுட்பம் சிறப்பாகச் செயல்படுகிறது.

3) ஒருவர், தட்டச்சுச் செய்யத் தெரிந்தால் மட்டுமே, இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும்.

4) கணினி விசைப்பலகையுடன் இத்தொழில்நுட்பத்தையும் பயன்படுத்த வேண்டும்.

அ) கூற்று 1, 2 சரியானவை ஆ) கூற்று 2, 3 சரியானவை

இ) கூற்று 3, 4 சரியானவை ஈ) கூற்று 1, 4 சரியானவை

18. பொருத்துக.

A) MODEM – 1) உலவி

B) SERVER – 2) வருடி

C) BROWSER – 3) இணக்கி

D) SCANNER – 4) வழங்கி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 1 | 3 | 2 | 4 |
| ஆ) | 4 | 2 | 3 | 1 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 2 | 1 | 4 | 3 |

19. கீழ்க்காணும் கூற்றுகளைப் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று – 1 தொல்காப்பியம் குறிப்பிடும் வண்ணங்கள், சித்திரகவியின் தோற்றத்திற்கு வித்திட்டன.

கூற்று – 2 திருமங்கையாழ்வாரால் பாடப்பட்ட 'திருவெழுகூற்றிருக்கை' சித்திரகவி வகையைச் சார்ந்தது.

அ) கூற்று 1, 2 சரியானவை ஆ) கூற்று 1, 2 தவறானவை

இ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு. ஈ) கூற்று 1 தவறு, 2 சரி.

20. சாகித்திய அகாதெமி பரிசுபெற்ற 'சூடிய பூ சூடற்க' என்னும் சிறுகதையை எழுதியவர்

அ) வண்ணதாசன் ஆ) நாஞ்சில்நாடன்

இ) அசோகமித்திரன் ஈ) ஆதவன் சுந்தரம்

## பகுதி – ஆ

**II. பின்வருவனவற்றுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்க. வினா எண் 24 க்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 7X 2 = 14

21. 'நாளும் கிழமையும்
நலிந்தோர்க்கு இல்லை
ஞாயிற்றுக் கிழமையும்
பெண்களுக்கில்லை'

– இக்கவிதையின் உள்ளடக்கத்தை விளக்குக.

22. 'பனித்துளியின் பேச்சு' – இச்சிறுகதை வெளிப்படுத்தும் கவித்துவத்தைப் புலப்படுத்துக.

23. சிறுகதை எழுதுவது குறித்து, ஜானகிராமன் கூறுவது யாது?

24. இரண்டாவது சீர் பெருமை என வரும்படி, மூன்று சீர் கொண்ட எட்டடிப் பாடலொன்று எழுதுக.
25. கட்டியக்காரனுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?
26. 'சின்னூல்' என அழைக்கப்படும் இலக்கண நூல் எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?
27. திரு. வி. க. வின் மொழிநடைச் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.
28. அச்சுப்படித் திருத்தக் குறியீடுகளுள் எவையேனும் நான்கனைக் குறிப்பிடுக.
29. சி. பா. ஆதித்தனாரின் மொழிநடைக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.
30. 'மூடுல்' என்பது என்ன? அதன் பயன் யாது?

## பகுதி – இ

**III. பின்வருவனவற்றுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்க. வினா எண் 40 க்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** *7 X 3 = 21*

31. புதுக்கவிதையின் உத்திகளுள் உவமையும் உருவகமும் எவ்வாறு வெளிப்படுகின்றன?
32. சித்தர்களின் இயல்புகள் குறித்துக் குதம்பைச் சித்தர் கூறுவது யாது?
33. தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளர்களுள், முதல் தலைமுறையினர் குறித்து நீவிர் அறிவன யாவை?
34. 'அன்றுமுதல் அந்த யானைக்கு ரெண்டு விளையாட்டுத் தோழர்' என்று, தோழர்களாகக் குறிப்பிடப்படுபவர்கள் யார்? ஏன்?
35. சிலப்பதிகாரம் குறிப்பிடும் நாடக அரங்கின் திரைச் சீலைகள் பற்றி எழுதுக.
36. நாடகத்தில் 'உரையாடல்' பெறுமிடம் யாது?
37. 'சதுரகராதி' – குறிப்பு வரைக.
38. முக்காலத்துக்கும் பொருத்தமுடைய வினைமுற்று எவ்வாறு அமையும்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
39. செய்தித்தாளில் இடம்பெறும் பல்வேறு தலைப்பு வடிவங்கள் யாவை?
40. மின்னிதழில் பதிவிடுவதற்கு ஏற்றவகையில், உங்கள் சொந்தப் படைப்பில் உருவான ஹைக்கூ கவிதைகள் இரண்டு எழுதுக.

## பகுதி – ஈ

**IV. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** *7 X 5 = 35*

41. புதுக்கவிதையின் புதுவடிவங்களை விளக்கி, வகைக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக. **அல்லது** பெற்றோரைப் பேணுதல் குறித்த கருத்துகளைச் சர்வ சமய சமரச கீர்த்தனைகள் வாயிலாக விளக்குக.

42. கதை சொல்லுதலின் உத்திகளை நும் பாடப்பகுதியில் அமைந்துள்ள கதைகளுடன் ஒப்பிட்டு விளக்குக. **அல்லது**

'பூ உதிரும்' என்னும் சிறுகதையில், உம்மைக் கவர்ந்த கதைமாந்தரின் பண்புகளை விளக்கி வரைக.

43. 'நூலகம் - ஒரு விரிவானம்' என்னும் தலைப்பில் பேசுவதற்கு ஒருபக்க அளவில் உரைக்குறிப்பு எழுதுக. **அல்லது**

குறுங்கதையின் வடிவத்தை விளக்கி, உங்களுக்கு ஏற்பட்ட ஓர் அனுபவ நிகழ்வினைக் குறுங்கதையாக எழுதுக.

44. மதுரகவி பாஸ்கரதாஸ், நாடகத்திற்கு ஆற்றிய அரும்பணி குறித்து எழுதுக. **அல்லது**

சிகாகோ சொற்பொழிவு, விவேகானந்தரின் பேச்சாற்றலுக்கு எங்ஙனம் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது?

45. அறிவியல் செய்திகளை மொழிபெயர்ப்பது குறித்துச் சான்றுடன் விளக்குக. **அல்லது**

கலைக்களஞ்சியங்கள் என்றால் என்ன? அவை எவ்வாறு பார்வை நூல்களாகப் பயன்படுகின்றன?

46. தமிழ் இதழியல் வளர்ச்சியில் கருத்துப்படங்கள் ஆற்றிய பணி குறித்து விளக்குக. **அல்லது**

பெண் இதழாளர்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர், 'வை.மு.கோதைநாயகி அம்மையார்' - இக்கூற்றை நிறுவுக.

47. இணையப் பாதுகாப்பிற்குரிய வழிகாட்டல்களுள் எவையேனும் ஐந்தனை விளக்குக. **அல்லது**

கணினியில், தமிழ் எழுத்துகளை உள்ளீடு செய்யும் முறைகளுள் எவையேனும் ஐந்தனை விளக்கி எழுதுக.

மேல்நிலை முதலாமாண்டு

சிறப்புத்தமிழ்

வினாத்தாள் – 2

காலம்: 2.30 மணி மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள் :

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்க. அச்சுப்பதிவில் குறையிருப்பின், அதனைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

பகுதி – அ

குறிப்பு : (1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க. 20×1=20

(2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. 'சிந்துக்குத் தந்தை' என அழைக்கப்பட்டவர்

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) கவிமணி ஈ) வாணிதாசன்

2. "நான் ஒரு உடும்பு

ஒரு கொக்கு

ஒரு ஒன்றுமேயில்லை" – இக்கவிதைக்குரிய உத்தியைத் தேர்ந்தெடுக்க.

அ) இருண்மை ஆ) உவமை இ) உருவகம் ஈ) சிலேடை

3. பொருத்துக.

நாலெழுத்து கொண்ட ஒரு சொல்லிலிருந்து உருவாகும் சொற்கள்

| | | |
|---|---|---|
| அ) முற்பாதி நீங்கினால் இருளைக் குறிக்கும் | – | 1) புயல் |
| ஆ) முன்னெழுத்து நீங்கினால் பெண்ணைக் குறிக்கும் | – | 2) அல் |
| இ) பிற்பாதி நீங்கினால் ஏவற்சொல்லைக் குறிக்கும் | – | 3) தையல் |
| ஈ) பிற்பாதியுடன் முன்னெழுத்து மேகத்தைக் குறிக்கும் | – | 4) புதை |

அ) அ – 1, ஆ – 3, இ – 2, ஈ – 4 ஆ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4

இ) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 1 ஈ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1

4. கீழ்க்காண்பனவற்றுள் மாயூரம் வேதநாயகருக்குப் பொருத்தமில்லாத கூற்றைத் தேர்ந்தெடுக்க.

அ)இவரது இசைப்பாடல்கள் 'சர்வ சமய சமரச கீர்த்தனைகள் என அழைக்கப்படுகின்றன.

ஆ) இவர், மாவட்ட நீதிமன்ற முன்சீப்பாகப் பணியாற்றியுள்ளார்.

இ) இவர், 'குளத்தங்கரை அரசமரம்' என்னும் சிறுகதையை எழுதியவர்.

ஈ) இவர், திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள குளத்தூரில் பிறந்தவர்.

5. 'பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்' என்னும் தொல்காப்பிய நூற்பா வரிக்கு உரையாசிரியர் கூறும் விளக்கம்

அ) பொய் கலந்த வேடிக்கைப் பேச்சு ஆ) உண்மை கலந்த வேடிக்கைப் பேச்சு
இ) கற்பனை கலந்த புனைவுமொழி ஈ) கற்பனையில்லாப் புனைவுமொழி

6. கீழ்க்காணும் கூற்றையும் அதன் காரணத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று : சிறுகதைக்குத் 'திருப்பம்' என்பது மிகவும் இன்றியமையாதது.
காரணம் : ஒரு கதையின் முடிவில் ஏற்படும் திருப்பமே, ஒரு சிறிய கதையைச் சிறுகதையாக்குகிறது.

அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று தவறு, காரணம் சரி.
இ) கூற்று சரி, காரணமும் சரி. ஈ) கூற்று தவறு, காரணமும் தவறு.

7. தவறாகப் பொருத்தப்பட்டுள்ள இணையைச் சுட்டிக்காட்டுக.

| | சிறுகதை | - | எழுத்தாளர் |
|---|---|---|---|
| அ) | பசி | - | தாமரைச்செல்வி |
| ஆ) | நசுக்கம் | - | சோ. தர்மன் |
| இ) | பனித்துளியின் பேச்சு | - | இளங்கோ கிருஷ்ணன் |
| ஈ) | ரப்பர் பந்து | - | எஸ். ராமகிருஷ்ணன் |

8. பொருத்துக.

| | சொற்றொடர் | - | விளக்கம் |
|---|---|---|---|
| அ) | உரையாடல்களால் ஆனவை | - | 1) அங்கங்கள் |
| ஆ) | அங்கங்களால் ஆனவை | - | 2) களங்கள் |
| இ) | காட்சிகளால் ஆனவை | - | 3) காட்சிகள் |
| ஈ) | காட்சிகளை வரையறுப்பவை | - | 4) நாடகங்கள் |

அ) அ – 4, ஆ– 3, இ – 2, ஈ – 1 ஆ) அ – 3, ஆ– 4, இ – 1, ஈ – 2
இ) அ – 2, ஆ– 1, இ – 4, ஈ – 3 ஈ) அ – 1, ஆ– 2, இ – 3, ஈ – 4

9. ஒரு நாடகத்திற்குரிய அகக்கட்டமைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் சரியான வரிசைமுறையைத் தேர்ந்தெடுக்க.

அ) தொடக்கம், மோதல், வளர்ச்சி, வீழ்ச்சி, உச்சநிலை, முடிவு
ஆ) தொடக்கம், மோதல், வீழ்ச்சி, வளர்ச்சி, உச்சநிலை, முடிவு
இ) தொடக்கம், வளர்ச்சி, மோதல், உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு
ஈ) தொடக்கம், மோதல், வளர்ச்சி, உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு

10. பேச்சுப்போட்டிகளில் வெல்வதற்குத் தேவைப்படும் குறிப்புகளைத் தேர்ந்தெடுக்க.

1) சிறந்த அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகள்
2) தன்னம்பிக்கை தரும் கதைகள், கவிதைகள்
3) சொற்பொழிவு, பட்டிமன்றப் பேச்சுகள்
4) கற்பனை, மூடநம்பிக்கைக் கதைகள்

அ) கூற்று 1, 3, 4 சரியானவை ஆ) கூற்று 1, 2, 3 சரியானவை
இ) கூற்று 1, 2, 4 சரியானவை ஈ) கூற்று 2, 3, 4 சரியானவை

11. 'நில், கவனி, செல்'. இத்தொடரில் இடம்பெற வேண்டிய தோன்றா எழுவாய்

அ) நீ ஆ) நீங்கள் இ) நீவிர் ஈ) நீர்

12. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே' என்னும் நூற்பா இடம்பெற்றுள்ள இலக்கணநூல்

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) நேமிநாதம் ஈ) வீரசோழியம்

13. கீழ்க்காண்பனவற்றுள் ஒருசொல் பலபொருளுக்குப் பொருத்தமில்லாத இணையைச் சுட்டுக.

| ஒரு சொல் | | பல பொருள் |
|---|---|---|
| அ) மதி | – | நிலவு, அறிவு, மதித்தல் |
| ஆ) ஒளி | – | விளக்கு, புகழ், பெருமை |
| இ) அணி | – | அழகு, நகை, வரிசை |
| ஈ) கா | – | காற்று, செய்யுள், தாமரை |

14. ஆங்கிலப் பழமொழிக்கு இணையான தமிழ்ப் பழமொழியைத் தேர்ந்தெடுக்க.

அ) A face is the index of the mind – அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
ஆ) Time and tide wait for none – காலமும் கடலலையும் காத்திருப்பதில்லை
இ) Diamond cuts diamond – வைரத்தை வைரத்தால்தான் அறுக்கமுடியும்
ஈ) Familiarity breeds contempt – பழகப் பழக நண்பர்களும் வெறுப்பர்

15. ஓர் இதழுக்குக் கருத்துக் கண்ணாடியாக விளங்குவது

அ) மொழிநடை ஆ) தலையங்கம் இ) மதிப்புரை ஈ) வாசகர் கடிதம்

16. காந்தியடிகள் நடத்தாத இதழைச் சுட்டிக்காட்டுக.

அ) ஹரிஜன் ஆ) தேசபக்தன் இ) யங் இந்தியா ஈ) நவஜீவன்

17. கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான காரணத்தைத் தேர்ந்தெடுக்க.

"இந்தியப் பத்திரிகைகளைவிடத் தமிழ்ப் பத்திரிகைகள் மிகுதியாக விற்பனையாகின்றன" என நேரு வியப்படைய காரணம் ------------.

அ) கடினமான இலக்கியநடை

ஆ) எளிமையான பேச்சுத்தமிழ்நடை

இ) மிகுதியான பக்கங்கள்

ஈ) விலையில்லா இதழ்கள்

18. கீழ்க்காணும் கூற்றுகளைப் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று : 1 இணையத்திலுள்ள பக்கங்களைப் பார்ப்பதற்கு உலவி பயன்படுகிறது.

கூற்று : 2 கூகுள் குரோம் என்பது, ஓர் உலவி.

அ) கூற்று 1, 2 சரியானவை ஆ) கூற்று 1, 2 தவறானவை

இ) கூற்று 1 சரி, 2 தவறு. ஈ) கூற்று 1 தவறு, 2 சரி.

19. கீழ்க்காண்பனவற்றுள் தவறான கூற்றைச் சுட்டிக்காட்டுக.

அ) விசைப்பலகை என்பது, கணினியில் தகவல்களை உள்ளீடு செய்யும் ஒரு கருவி.

ஆ) விசைப்பலகையைத் தட்டச்சுப்பலகை எனவும் கூறுவர்.

இ) ரோமன் விசைப்பலகையில் இடைமுகச்செயலி வாயிலாகத் தமிழ் எழுத்துகளை உள்ளீடு செய்யலாம்.

ஈ) விசைப்பலகையில் எழுத்துகள் மட்டுமே உள்ளன.

20. தட்டச்சில் ஒரு சொல்லை உள்ளீடு செய்தவுடன், அதில் பிழையிருந்தால் சுட்டிக்காட்டுவது

அ) சொற்பிழைதிருத்தி ஆ) சந்திப்பிழைதிருத்தி

இ) இலக்கணப்பிழைதிருத்தி ஈ) தமிழ்ச்சொல் சுட்டி

## பகுதி – ஆ

***II. பின்வருவனவற்றுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்க. வினா எண் 24 க்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.*** *7 X 2= 14*

21. காப்பியக்கவிதைகளின் பாடுபொருள்களைக் குறிப்பிடுக.
22. கதை சொல்லுதலில் பின்னோக்கு உத்தி என்றால் என்ன?
23. பூ உதிரும் சிறுகதையில், "எனக்கு வேறொரு மகன்கூட இல்லையே" என்று பெரியசாமி, யாரிடம் எப்போது கூறினார்?
24. ஒவ்வோர் அடியிலும் மூன்றாவது சொல், 'அழகு' என முடியும்படி எட்டுவரிப் பாடல் எழுதுக.
25. நாடகத்தில், 'ஆர்வத்தொக்கல்' பெறுமிடம் யாது?
26. 'சொல்லுக்குச் சொல் பொருள் விளக்கம் தருவதைத் தொல்காப்பியம்வழி எடுத்துக்காட்டுக.

27. 'திருவள்ளுவர் எனக்கு மனப்பாடம்' – இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயரைச் சுட்டிக்காட்டுக.

28. பருவஇதழ்களைச் செய்திகளின் அடிப்படையில் வகைப்படுத்திக் கூறுக.

29. கீழ்க்காணும் தொடரிலுள்ள பிழைகளை அச்சுப்படி திருத்தக்குறியீடுகளைக் கொண்டு திருத்தி எழுதுக.

'ஒரு நாட்டின் முன் னேற்ற வளர்ச்சியில் கல்விகு இன்றி யமையாத பங்கு உண்டு'

30. கல்விச் செயல்பாட்டுக்கு உதவும் சமூகஊடகங்களுள் ஏதேனும் ஒன்றுபற்றி எழுதுக.

## பகுதி – இ

**III.பின்வருவனவற்றுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்க. வினா எண் 40 க்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** *7 X 3 = 21*

31. நா. காமராசன், 'சந்(த)திப்பிழை' என யாரைக் குறிப்பிடுகிறார்? ஏன்?

32. 'அற்பமான விஷயங்களுக்குக்கூடப் பிரௌனி சிரிக்கிறது' என அஷமஞ்சாபாபு நினைக்கக் காரணம் என்ன?

33. 'படிப்பவர்களின் ஊகத்திற்கு மாறான திருப்பம் கொண்டது, ஒற்றைக்குரல்' என்னும் நுண்கதை' – விளக்குக.

34. தெருக்கூத்தில், 'களரி கட்டுதல்' என்றால் என்ன?

35. 'நகைச்சுவையுணர்வைத் தம் பேச்சில் வெளிப்படுத்துபவர் என். எஸ். கிருஷ்ணன்' – இக்கூற்றை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

36. Fish seed – இச்சொற்றொடரைச் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கக்கூடாது. ஏன்?

37. மணிப்பிரவாள நடை என்றால் என்ன? இம்மொழிநடை அமைந்த நூலொன்றை எடுத்துக்காட்டுக.

38. செய்தித்தாளின் மூவகைப் பக்கஅமைப்புயை விளக்குக.

39. தமிழ் இணையக்கல்விக்கழகத்தின் குறிக்கோள்களுள் எவையேனும் மூன்றனை எழுதுக.

40. விடுகதை அல்லது புதிர் அமைந்து வருமாறு நான்குவரிப் பாடலொன்றை எழுதுக.

## பகுதி – ஈ

**IV. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** *7X5=35*

41. 'நாட்டுப்புறப்பாடல்களில் இயல்பான சொல்வளமும் உணர்ச்சிகளின் கொந்தளிப்பும் நிறைந்திருக்கும்' – இக்கூற்றை நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல்கள்வழி விளக்குக. **அல்லது**

உலகளாவிய கவிதை வடிவங்களைப் பின்பற்றித் தமிழில் எழுதப்படும் புதுக்கவிதைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

42. சிறுகதை வாசிப்பின் படிநிலைகளை விளக்கி எழுதுக. **அல்லது**

'குழந்தைகள் சூழலுக்கேற்பத் தம்மை மாற்றிக்கொள்ளும் இயல்புடையவர்கள்'- இக்கூற்றை 'யானையின் சாவு' சிறுகதையைக்கொண்டு விளக்குக.

43. நீங்கள் விரும்பிப் படித்த சிறுகதையொன்றை நாடக வடிவில் எழுதிக்காட்டுக.

**அல்லது**

சிறுவயதில், உங்களுடன் பழகிய நண்பரை நெடுநாள் கழித்துச் சந்திக்கிறீர்கள். அவருடன் படித்தபோது ஏற்பட்ட மறக்கமுடியாத நிகழ்வொன்றை, நுண்கதை வடிவத்தில் எழுதுக.

44. ஜெயந்தனின் 'ஒரு ரூபாய்' என்னும் நாடகம், பிற நாடக வடிவமைப்பிலிருந்து மாறுபட்டுள்ளது என்பதை நிறுவுக. **அல்லது**

பேச்சாளருக்குரிய பண்புகளையும் தகுதிகளையும் பட்டியலிடுக.

45. ஐவகை இலக்கணத்தின் பெயர்களைக் கூறி, வகைக்கோர் இலக்கணநூலை எடுத்துக்காட்டி விளக்குக. **அல்லது**

தொடரமைப்பில் திணை, பால், எண் பொருத்தப்பாட்டுடன் அமைந்து வருவதனை எடுத்துக்காட்டி விளக்குக.

46. தமிழ் இதழ்களுடன் ஒரு சந்திப்பு என்னும் பாடக்கருத்து வாயிலாக, நீவிர் அறிந்துகொண்ட இதழியல் செய்திகளைத் தொகுத்தெழுதுக. **அல்லது**

'தலையங்கச்செய்திகளைச் சிறப்பாகத் தருவதில் வல்லவர், டி. எஸ். சொக்கலிங்கம்' - இக்கூற்றை நிறுவுக.

47. உங்களது சொந்த வலைப்பூவில் பதிவிடுவதற்கேற்பக் 'கணித்தமிழில் கன்னல் தமிழின் மாண்பு' என்னும் தலைப்பில் கட்டுரை உருவாக்குக. **அல்லது**

தமிழில் வெளியாகும் மின்னிதழ்களுள் எவையேனும் ஐந்தனைப்பற்றி விளக்கி எழுதுக.